பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
02 08 2025 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி வாரணாசியில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

2. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் வெற்றி, நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள வலுவான விளையாட்டு கட்டமைப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. பீஹார் மாநிலத்தில் வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

4. மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜரில் தீவிரவாதிகள் கடத்திய இந்தியரை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

5. **Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் இந்தோனேஷியாவின் **Alwi Farhan**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி வாரணாசியில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

ஒருநாள் பயணமாக அந்நகருக்கு செல்லவுள்ள அவர், வாரணாசி – படோஹி சாலை, **Chhitauni - Shool Tankeshwar** சாலையை அகலப்படுத்தும் பணியை தொடங்கி வைக்கிறார்.

மோஹன்சராய் - அகல்புரா இடையே போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலத்தையும் அவர் திறந்து வைக்கிறார்.

880 கோடி ரூபாய் மதிப்பில் மின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நவீன மின் வினியோக திட்டத்திற்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

வாரணாசியில் கங்கை நதியின் கரையோரங்களை அழகுபடுத்தும் பணிகளையும், தண்ணீரை சுத்திகரிக்கும் பணிகளையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் 47 ஊரக குடிநீர் திட்டத்தையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

கல்வி, சுகாதாரம், சுற்றுலா, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த பல புதிய திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 20வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விடுவிக்க உள்ளார்.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் வெற்றி, விளையாட்டுத் திறமைக்கு ஒரு சான்றாக மட்டுமல்லாமல் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள வலுவான விளையாட்டு கட்டமைப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

உலகக் கோப்பை செஸ் போட்டியில் வெற்றி பெற்ற திவ்யா தேஷ்முக்-கிற்கு நேற்று புதுதில்லியில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் பேசிய அவர், ஜார்ஜியாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பங்கேற்ற திவ்யாவும், மூத்த கிராண்ட் மாஸ்டர் கொனேரு ஹம்பியும் சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கு பெருமையை தேடித் தந்துள்ளனர் என்று கூறினார்.

இவர்கள் இருவரும் வருங்கால தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாகவும் அவர் பாராட்டினார்.

உலகக் கோப்பை செஸ் போட்டி மட்டுமல்லாமல், சர்வதேச அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் இந்திய வீரர்கள் பெற்று வரும் வெற்றி, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் வலுவான விளையாட்டுக் கட்டமைப்புக்கு கிடைத்துள்ள வெற்றி என்று அவர் கூறினார்.

ஆரோக்கியமான விளையாட்டுச் சூழலை ஏற்படுத்த மத்திய அர பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் ஒரு பகுதியாக தேசிய விளையாட்டு ஆளுமை மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த மசோதா நிறைவேறிய பின்னர் நாடு விளையாட்டுத் துறையில் மேலும் முன்னேற்றத்தைக் காணும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் உள்ள 73 முக்கியமான ரயில் நிலையங்களில் பண்டிகை காலத்தின்போது பயணிகள் நெரிசல் இல்லாமல் பயணம் செய்ய ஏதுவாக உரிய நடவடிக்கைகளை ரயில்வே எடுத்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், நெரிசலைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் ரயில் நிலைய மேலாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நெரிசல் அதிகமாக இருக்கும்போது ரயில் நிலையத்தில் ஒரே நேரத்தில் பொதுமக்கள் நுழைவதை தடுத்து நெரிசல் இல்லாமல் செல்வதற்காக 5 ரயில் நிலையங்களில் சோதனை ரீதியாக புதிய முன்முயற்சி தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்காணிப்பு கேமராக்கள் மூலமாக தீவிர கண்காணிப்பு, ஒலிபெருக்கிகள் மூலம் முறையான அறிவிப்பு, அவசர நிலையை கையாள தனி அறைகள் என பல்வேறு ஏற்பாடுகள் முக்கியமான ரயில் நிலையங்களில் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த ஏற்பாடுகள் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த உதவுகிறது என்றும், பயணம் உறுதிப்படுத்தப்பட்ட பயணச் சீட்டுகளை வைத்திருப்பவர்கள் மட்டுமே நடைபாதைகளுக்குள் நுழைய இனி அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பயணச்சீட்டு இல்லாதவர்கள் மற்றும் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்கள் ரயில் வரும் வரை காத்திருப்பு பகுதிக்கு வெளியே அமர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<>>>>

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜரில் தீவிரவாத தாக்குதலின்போது கடத்திச் செல்லப்பட்ட இந்தியரை மீட்கும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலின்போது இந்தியர்கள் 2 பேர் உயிரிழந்தனர்.

ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேசத்திற்கு உட்பட்ட ராம்பன் மாவட்டத்தைச் சேர்ந்த ரஞ்சித் சிங் என்பவர் இந்த சம்பவத்தின்போது தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

அவரை உயிருடன் மீட்பதற்கு அங்குள்ள இந்தியா தூதரகம் நைஜர் அரசுடன் இணைந்து தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பாக அவர் மீட்கப்படுவார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே இந்த விவகாரம் தொடர்பாக இந்திய தூதரக அதிகாரிகள் நைஜர் அரசின் மூத்த அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளதாக வெளியுறவுத்துறை இணைமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பீஹார் மாநிலத்தில் வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

ஆணையத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் இந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் வாக்காளர்கள் தங்களது பெயர்களை சரிபார்க்கலாம்.

வாக்காளர்கள் தங்களது பெயர் விடுபட்டிருந்தால் பெயர்களை சேர்க்கக் கோரி விண்ணப்பிக்கலாம்.

வரைவு வாக்காளர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அவர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதாக கருதினால் அது தொடர்பாக அவர்கள் கோரிக்கை விடுக்கலாம் என்றும் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் குழந்தைத் தொழிலாளர்களை மீட்கும் தேசிய அளவிலான நடவடிக்கையின் ஒரு பகுதியாக தெலங்கானா மாநில காவல்துறையினர் கடந்த மாதம் 7 ஆயிரத்து 600 சிறார்களை மீட்டுள்ளனர்.

இதில் 529 பேர் சிறுமியர். மாநில மகளிர் மேம்பாடு மற்றும் குழந்தைகள் நலத்துறை, தொழிலாளர் நலத்துறை, சுகாதாரத்துறை மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் இணைந்து ஒரு மாதம் நடத்திய மீட்புப் பணியில் இக்குழந்தைகள் மீட்கப்பட்டனர்.

இந்தக் குழந்தைகளில் சுமார் 3 ஆயிரத்து 70 பேர் ஒடிசா, பீஹார், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களையும் சேர்ந்தவர்கள்.

4 சிறார்கள் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இந்தக் குழந்தைகள் தெருவோரத்தில் வசித்து வந்தபோது கடைகளில் மோசமான சூழலில் பணியமர்த்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களைப் பணியமர்த்திய கடைகள் மீது குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் 46 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெலங்கானா மாநில தொழிலாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அசாம், மேகாலயா, மேற்குவங்கம், சிக்கிம் மாநிலங்களில் இடன்று பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், பீஹார் மாநிலங்களில் கன முதல் மிக கனமழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கட், ஹரியானா, தில்லி, ஹிமாச்சலப்பிரதேசம், ஜார்கண்ட், கேரளா, மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், பீஹார், மேற்கு மத்தியப்பிரசேதம், ஜார்கண்ட் மாநிலங்களில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தேசிய திரைப்பட விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

‘பார்க்கிங்’ திரைப்படத்தில் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியதற்காக சிறந்த குணச்சித்திர நடிகருக்கான தேசிய விருது பெறும் திரு. எம்.எஸ். பாஸ்கர் மற்றும் திரைக்கதைக்கான விருதை வென்றுள்ள படக் குழுவுக்கும் வாழ்த்துகளை தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

2023ஆம் ஆண்டு வெளியான வாத்தி திரைப்படத்தில் சிறந்த முறையில் இசையமைத்தற்காக விருது பெற உள்ள இசையமைப்பாளர் திரு. ஜி.வி. பிரகாஷ், சிறந்த ஒளிப்பதிவிற்காக தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள லிட்டில் விங்ஸ் குறும்படத்தை தயாரித்த படக்குழுவினார் ஆகியோருக்கும் அமைச்சர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நலம் காக்கும் திட்டத்தை சென்னையில் **முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** இன்று தொடங்கி வைக்கிறார்.

சென்னை உட்பட 19 மாநகராட்சிகளுக்கு உட்பட்ட 57 இடங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் மொத்தம் ஆயிரத்து 256 முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த முகாம்களில் நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், இதயம், சிறுநீரகம் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் தொடர்பான பரிசோதனைகள் நடைபெற உள்ளன.

காது, மூக்கு., தொண்டை, பல் மருத்துவ சேவைகளும், பெண்களுக்கு கருப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோய் ஆகியவற்றை கண்டறிதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகளும், மருத்துவ சேவைகளும் வழங்கப்பட உள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இந்த முகாம்கள் நடைபெறும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் இந்தோனேஷியாவின் **Alwi F**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் **Tharun Mannepali –** மலேசியாவின் ஜஸ்டின் ஹோ-வை எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை, மலேசியாவின் **Choong Hon – Muhammad Haikal** இணையிடம் தோல்வியடைந்தது.

**<<<<The end>>>>**